Burma Refugees' Quarters

* 238 *Q*.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN): Will the Hon. the Minister for Finance be pleased to state:

(*a*) whether the Burma Refugees, who occupy quarters in Survey No. 121 of Padiyanallur village in Cholapuram firka in Ponneri taluk of Chingleput district were evicted on 8th October 1968; and

(*b*) if so, the reason therefor?

பர்மா அகதிகள் குடியிருப்பு

திரு. ஆர். கிருஷ்ணஸ்வாமி நாயுடு (திரு என். ஆர். தியாகராஜன் சார்பில்): மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968 அக்டோபர் 8-ம் தேதி செங்கற்பட்டு மாவட்ட பொன்னேரி தாலுக்கா சோழபுரம் பிர்க்கா பாடிய நல்லூர் கிராமம் சர்வே எண். 121-ல் புறம்போக்கு இடத்தில் பர்மா அகதிகள் குடியிருப்புகள் அத்தனையும் காலி செய்யப்பட்டதா ?

(இ) ஆமெனில், காரணமென்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இந்தப் பகுதியில் ஆக்ரமிப்பு செய்த சுமார் 1,000 அகதிகளில் 4 பேர்கள் மட்டுமே அகற்றப் பட்டனர்.

(இ) பாடியநல்லூர் சர்வே எண். 12‡-ல் பகுதியில் அமைந்துள்ள தற்காலிக முகாமின் எல்லைகளுக்குள் இந்த நாலு பேர்கள் ஆக்ரமிப்பு செய்தனர். இந்தத் தற்காலிக முகாமுக்கு செங்குன்றத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரும் குழாய்கள் வரை மேற்படி வெளவியவர்கள் குடிசைகளைக் கட்டிக் கொண்டதால் இந்தக் குழாய்கள் ஆபத்தான நிலைமையை அடைந்தன. அதனால் இந்த நாலு பேர்கள் அவ்விடத்தி லிருந்து அகற்றப்பட்டனர்.

A.D.T. 27 Paddy

* 239 *Q*.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN): Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) the acreage cultivated with A.D.T. 27 variety of paddy in Thanjavur district and other places in Tamil Nadu during 1966 and 1967; and

(*b*) the reason for the inability to bring a larger area under its cultivation?

ஏ. டி. டி. 27 நெல்

திரு ஆர். கிருஷ்ணஸ்வாமி நாயுடு (திரு என். ஆர். தியாகராஜன் சார்பில்): மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1966–67-ம் ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டிலும் தஞ்சை மாவட்டத்திலும் தமிழகத்தின் பிற மாவட்டங்களிலும் ஏ.டி.டி. 27 நெல் எத்தனை ஏக்கரில் பயிரிடப்பட்டது ?

(இ) அதிகம் பயிர் செய்ய இயலாமைக்கான காரணம் என்ன ?